24.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழக காய்கறிகள் குறித்த புகார்: அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை: இந்திய பயிர்ப் பாதுகாப்பு கூட்டமைப்பு**



தமிழக காய்கறிகள் குறித்து கேரள அரசு தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும், அவை அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்றும் இந்திய பயிர்ப் பாதுகாப்பு கூட்டமைப்பு (சி.சி.எஃப்.ஐ.) தெரிவித்துள்ளது.

கேரள உணவுப் பாதுகாப்பு ஆணையர் கடந்த சில நாள்களுக்கு முன்பு தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளில் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவைக் காட்டிலும் கூடுதலாகப் பூச்சிக் கொல்லி மருந்துகள் உள்ளன. இதனை சாப்பிடுவோருக்கு சர்க்கரை நோய், புற்றுநோய், உடல் பருமன் உள்ளிட்ட பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு தீர்வு காண

வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதைத்தொடர்ந்து, தமிழகத்தில் விளையும் காய்கறிகள் சாப்பிட ஏற்றவை அல்ல என்று சிலர் பிரசாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது. இந்த நிலையில், இந்தப் பிரச்னை தொடர்பாக இந்திய பயிர்ப் பாதுகாப்பு கூட்டமைப்பின் (சி.சி.எஃப்.ஐ.) தலைவர் ஆர்.டி.ஷ்ராஃப், ஆலோசகர் எஸ்.கணேசன் ஆகியோர் சென்னையில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் குறித்து கேரள வேளாண் பல்கலைக்கழகம், கேரள உணவு பாதுகாப்பு ஆணையம் ஆகியவை தொடர்ந்து உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவித்து வருகின்றன. இது குறித்து அந்த மாநிலத்தின் உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் தவறான கருத்துகளை வெளியிட்டுள்ளார். மேலும், தமிழக காய்கறிகள் குறித்து போலியான பிரசாரங்களில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழக விவசாயிகள், கேரள மக்கள் ஆகியோர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. ஒரு சதவீதத்துக்கும் குறைவு: அனைத்து இந்திய ஒருங்கிணைப்பு திட்டத்தின் ஓர் அங்கமாக, கேரள வேளாண் பல்கலைக்கழகம் மேற்கொண்ட பூச்சிக்கொல்லி மருந்து கண்காணிப்பு ஆய்வு விவரங்களை தற்போது வெளியிட்டுள்ளோம். இதில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 337 காய்கறிகளில் வெறும் 3 காய்கறிகளில் (ஒரு சதவீதத்துக்கும் குறைவு) மட்டுமே அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் (ங்ஹஷ்ண்ம்ன்ம் ல்ங்ழ்ம்ண்ள்ள்ண்க்ஷப்ங் ப்ண்ம்ண்ற்) பூச்சிக்கொல்லி மருந்துகள் அதிகமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், கேரள வேளாண் பல்கலைக்கழகத்தில் "வெஜ் வாஷ்' என்ற பெயரில் காய்கறிகளைச் சுத்தம் செய்யக் கூடிய ரூ.100 மதிப்புள்ள மருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் விற்பனையை அதிகரிப்பது போன்ற வணிக ரீதியான காரணங்களுக்காகத்தான் இந்தப் பிரச்னையை எழுப்பியுள்ளனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. கேரள மாநில அரசால் தயாரிக்கப்பட்ட

பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வு முடிவுகள் குறித்து இணையதளத்தில் பெறப்பட்ட தகவல்களிலும் கேரள அரசின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை. இது குறித்து சி.சி.எஃப்.ஐ. சார்பில் கேரள உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் டி.வி.அனுபமாவுக்கு கடந்த 10-ஆம் தேதி ஒரு புகார் கடிதத்தை அனுப்பினோம். இந்த கடிதத்துக்கு அவர் எந்தப் பதிலையும் அனுப்பவில்லை. இதைத் தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில் ஆதாரமற்ற, பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய தகவல்களை பரப்பி வருவதாக கேரள வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு தற்போது நீதிமன்றத்தின் மூலம் நோட்டீஸ் அனுப்பியுள்ளோம்.

திரும்பப் பெற வேண்டும்: இங்கு (தமிழகத்தில்) விளையும் எந்தெந்த காய்கறிகளில் பூச்சி மருந்துகள் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகளவில் உள்ளன; எந்த வகையான மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன போன்றவை குறித்து கேரள அரசின் சார்பில் இதுவரை எந்தப் புள்ளிவிவரமும் வெளியிடப்படவில்லை.

எனவே தமிழகத்தில் இருந்து அனுப்பப்படும் காய்கறி குறித்து கேரள உணவுப் பாதுகாப்பு ஆணையர் கூறிய கருத்துகளை சட்டப்படி திரும்பப்பெற வேண்டும். இது குறித்து ஊடகங்கள், பொதுமக்கள் முழுமையான விழிப்புணர்வு பெற வேண்டும்.

வேளாண் விளைபொருள்களில் பூச்சிக்கொல்லி மருந்துகள் படிந்திருப்பது பற்றி குறித்த கால இடைவெளிகளில் கேரள அரசு மேற்கொள்ளும் ஆய்வுகள் வரவேற்கத்தக்கது.

அதேநேரத்தில், கேரளத்திலும், பிற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களையும் பாரபட்சமின்றி ஆய்வு செய்ய வேண்டும். இந்த சோதனை நவீன முறையிலும், இந்திய வேளாண் ஆராய்ச்சி பயிலகத்தின் (ஐ.ஏ.ஆர்.ஐ.) அனைத்திந்திய ஒருங்கிணைந்த திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறையிலும் இருக்க வேண்டும் என்றனர்.

**விலை குறைய வாய்ப்பு**

இது தொடர்பாக சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில்

கலந்துகொண்ட உதகமண்டலத்தில் உள்ள தூனேரி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சாமிநாதன், சிவராஜ் ஆகியோர் கூறியதாவது: கேரளத்துக்கு தமிழகத்திலிருந்து அனுப்பப்படும் காய்கறிகளில் 75 சதவீத காய்கறிகள் நீலகிரி, மேட்டுப்பாளையம், உதகமண்டலம் ஆகிய பகுதிகளிலிருந்துதான் அனுப்பப்படுகிறது. வழக்கமாக, மேட்டுப்பாளையத்திலிருந்து 70 முதல் 80 டன் காய்கறிகள் அனுப்பப்பட்டு வந்தது. இந்தப் பிரச்னை காரணமாக தற்போது 40 டன் முதல் 50 டன் காய்கறிகள்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. கேரள வியாபாரிகள் தமிழகத்துக்கு வந்து ஏலம் மூலம் காய்கறிகளை வாங்கும்போது விலை சற்று அதிகம். அதே நேரத்தில் இங்கிருந்து கேரளத்துக்கு நேரடியாக அனுப்பும்போது விலை சற்று குறைவு. தற்போது நடைபெற்று வரும் பிரச்னை காரணமாக தமிழகத்திலிருந்து அனுப்பப்படவுள்ள காய்கறிகளை அவர்கள் குறைந்த விலைக்கு கேட்க வாய்ப்புள்ளது. எனவே, இந்தப் பிரச்னையில் தமிழக அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்றனர்.

**நீலகிரி, தேனி, கோவையில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தில் நீலகிரி, தேனி, கோவையில் அடுத்த 24 மணி நேரத்தில் சில இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: ஆந்திரம், கர்நாடகம், தெலங்கானா ஆகிய பகுதிகளில், தென்மேற்குப் பருவ மழை தீவிரம் அடைந்து வருகிறது. அந்தப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் தாக்கமாக, தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களில் கடந்த ஓரிரு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நீலகிரியில் 150 மி.மீ மழை: கடந்த 24 மணி நேரத்தில், நீலகிரி

மாவட்டம்- தேவலா, ஜி.பஜாரில் அதிகபட்சமாக 150 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக, தேனி மாவட்டம்- பெரியாறில் 120 மி.மீ, கோவை மாவட்டம்- வால்பாறையில் 90 மி.மீ, நீலகிரி மாவட்டம்- சின்னக் கல்லாறில் 80 மி.மீ, நடுவட்டத்தில் 60 மி.மீ, உதக மண்டலத்தில் 50 மி.மீ, கேத்தியில் 40 மி.மீ. மழை பதிவானது.

பலத்த மழை: வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். தேனி, நீலகிரி, கோவை ஆகிய இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்த வரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார்.

**கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்: ஜி.கே.வாசன்**

கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழக காய்கறிகளை வாங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தினார். இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: கடந்த ஒரு மாத காலமாக கேரள அரசு தமிழக காய்கறிகளும், பழங்களும் நச்சுத்தன்மை வாய்ந்தவை எனக் கூறி வாங்க மறுக்கிறது. இதனால் தமிழகக் காய்கறிகளைக் கேரளத்துக்குக் கொண்டு வர தடை விதிப்பது என அந்த மாநில அரசு அதிகாரிகள், தமிழக உணவுத் துறை அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியிருப்பது காய்கறி உற்பத்தியாளர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. வளைகுடா நாடுகளும் தமிழகக் காய்கறி, பழங்களுக்குத் தடை விதிக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்த நிலையில் தமிழகத்தில் கன்னியாகுமரி, சேலம், நீலகிரி, தருமபுரி, மதுரை, திண்டுக்கல், தேனி, திருநெல்வேலி ஆகிய 11 மாவட்டங்களில்

இருந்து காய்கறி, பழங்களின் 117 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பல்கலைப் பூச்சியியல் துறையின், பூச்சிக் கொல்லி நச்சு இயல் ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டது.

இந்த ஆய்வகம் மத்திய அரசின் சோதனை, அளவீட்டு ஆய்வுக் கூடங்களின் தேசிய அங்கீகாரம் பெற்றதாகும். அதில் தமிழக வாழை, தக்காளி, மிளகாய், திராட்சை, மாம்பழங்கள் ஆகியவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வின்படி 96 சதவீத காய்கறி, பழங்கள் நச்சுத்தன்மை இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

எனவே, தமிழக அரசு கேரள அரசோடு உடனே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். தமிழகக் காய்கறிகள், பழங்களை கேரள அரசு தொடர்ந்து வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

**வேளாண் புரட்சியால் மட்டுமே கிராமங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லலாம்**

வேளாண் புரட்சியால் மட்டுமே கிராமங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும் என தமிழ்நாடு வேளாண்மை பல்கலை. முன்னாள் துணைவேந்தர் சி.ராமசாமி தெரிவித்தார்.

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக சமூக அறிவியல் புலம் சார்பில், அடித்தள மேம்பாட்டிற்கான வளர்ச்சி இலக்குகள் - கொள்கை உருவாக்கமும் சவால்களும் என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு துணைவேந்தர் சு.நடராஜன் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசியது: சமூக பொருளாதார வளர்ச்சி என்பது கிராமப்புறங்களிலிருந்து தொடங்கப்பட வேண்டும்.
நாட்டின் அடித்தள மக்களின் நிலை குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு, அதன் அடிப்படையில் வளர்ச்சிக்கான செயல்களை தொடங்கினால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்றார்.

அரசியல் அறிவியல் துறைப் பேராசிரியர் ஜி.பழனிதுரை:

கிராமப்புற வளர்ச்சிக்காக மத்திய, மாநில அரசுகள் சார்பில் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, ஏற்றுமதி செய்து வருகிறோம். உற்பத்தி பெருகிய நிலையில், பற்றாக்குறையும் இருந்து வருகிறது. இந்த முரண்பாடு அகற்றப்பட வேண்டும். தமிழகத்தில் உள்ள 12,500 ஊராட்சிகளிலும், சரியான வழிகாட்டுதலை ஏற்படுத்தி, அனைத்து தேவைகளையும் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் நிலை உருவாக வேண்டும் என்றார்.

சிறப்புரை நிகழ்த்திய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சி.ராமசாமி:

வேளாண் புரட்சியால் மட்டுமே கிராமங்கள் முன்னேற்றம் பெற முடியும். சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் வளர்ச்சி பெற உதவிகள் தேவை. சுயஉதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும். கிராமப்புற பெண்கள் மற்றும் இளைஞர்களிடம், கல்வி மற்றும் சுயதொழில் சார்ந்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், பாரதிதாசன் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் சி.தங்கமுத்து, பேராசிரியர்கள் டி.வேல்நம்பி(ஜாப்னா பல்கலை.), எம்.இந்திரா(மைசூர் பல்கலை.), டி.வசந்தகுமார்(சென்னைப் பல்கலை.), சமூக அறிவியல் புலத்தலைவர் பி.சுப்புராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்பளக் கட்டில் புழுக்கள்

கோவில்பாளையத்தை அடுத்துள்ள வழியாம்பாளையம் பிரிவு அருகே மளிகைக் கடையில் வாடிக்கையாளர் ஒருவர் வாங்கிய பிரபல நிறுவனத்தின் அப்பளக் கட்டில் புழுக்கள் காணப்பட்டன.

வழியாம்பாளையம் பிரிவு, வையாபுரி நகரில் வசித்து வருபவர் ஆனந்தராஜ் (27). இவர் திங்கள்கிழமை அருகில் உள்ள மளிகை கடையில் பிரபல நிறுவனத்தின் 4 அப்பளக் கட்டுகளை வாங்கியுள்ளார். வீட்டிற்கு வந்து அதை பிரித்து பார்த்துள்ளார். அப்போது அந்த அப்பளக் கட்டுகளில் புழுக்கள் இருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து ஆனந்தராஜ் மளிகைக் கடைக்குச் சென்று கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதுகுறித்து ஆனந்தராஜ் கூறுகையில், அப்பளக்கட்டில் புழுக்கள் இருந்தது குறித்து உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

**2-ஆவது நாளாக பில்லூர் அணையிலிருந்து நீர் வெளியேற்றம்**

பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர் மழையால் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதையடுத்து, 2-ஆவது நாளாக செவ்வாய்க்கிழமை அணையிலிருந்து நீர் வெளியேற்றப்பட்டது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதையடுத்து, கேரள மாநில எல்லையை ஒட்டிய நீலகிரி மாவட்ட பகுதிகளிலும், பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் கடந்த சிலநாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் பில்லூர் அணை நீர்மட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் 98 ஆக உயர்ந்ததையடுத்து, பாதுகாப்பு கருதி திங்கள்கிழமை மாலை அணையின் 4 மதகுகளும் திறந்து விடப்பட்டன. இதனால் பவானி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டனர். தொடர்ந்து திங்கள்கிழமை இரவு முழுவதும் பில்லூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்ததால், பில்லூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், 2-வது நாளாக செவ்வாய்கிழமை அணையிலிருந்து 10 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து, மேட்டுப்பாளையம் பவானி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது.

உதகை, பவானி பாலமருகே, ஆற்றின் கரையோரமுள்ள பவானி அம்மன் கோயில் நீரால் சூழப்பட்டுள்ளது. இதையடுத்து, வருவாய்த்துறை சார்பில் ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

**தனியார் பால் பண்ணையில் அதிகாரிகள் ஆய்வு**

ஈரோடு அருகே கருங்கல்பாளையத்தில் உள்ள தனியார் பால் பண்ணையில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். ஈரோடு கிருஷ்ணம்பாளையத்தைச் சேர்ந்தவர் சரவணன். இவர், கருங்கல்பாளையம் காவல் நிலையம் அருகே பால் பண்ணையை நடத்தி வருகிறார். இந்தப் பால் பண்ணையில் சுகாதாரமற்ற முறையில் பால் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக உணவுப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்தப் பால் பண்ணையில் மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் கருணாநிதி தலைமையிலான அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை சோதனை மேற்கொண்டனர். அப்போது சுகாதாரமற்ற முறையில் வெண்ணெய், தயிர், மோர் உள்ளிட்ட பால் பொருள்கள் தயாரிக்கப்படுவது தெரியவந்தது.

இதையடுத்து, அந்தப் பால் பொருள்களின் மாதிரிகளை ஆய்வுக்காக, கோவைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் கருணாநிதி கூறியதாவது: ஈரோடு மாநகரில் ரயில் நிலையம் சாலை, கள்ளுக்கடைமேடு, கிருஷ்ணம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இயங்கி வரும் பால் பண்ணைகளில் ஏற்கெனவே ஆய்வு நடத்தினோம். அப்போது 5 பால் பண்ணைகளில் சுகாதாரமற்ற

முறையில் பால் பொருள்கள் தயாரிப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதன் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

தற்போது கருங்கல்பாளையத்தில் உள்ள தனியார் பால் பண்ணையில் ஆய்வு நடத்தி பால் பொருள்களை மாதிரி எடுத்துள்ளோம். அதை கோவைக்கு ஆய்வுக்கு அனுப்பி முடிவுகள் வந்ததும் இந்தப் பால் பண்ணை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**நீர்வரத்து அதிகரிப்பு: 73 அடியை எட்டியது பவானிசாகர் அணை**

பில்லூர் அணையில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால் நீர்வரத்து அதிகரித்து பவானிசாகர் அணை செவ்வாய்க்கிழமை 73 அடியை எட்டியது. ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது 120 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணை. கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் உள்ள பவானி ஆறும், நீலகிரி மாவட்டம், தெங்குமரஹாடா மோயாறும், பவானி அணைக்கு முக்கிய நீராதாரமாகும். கடந்த சில நாள்களாக நீலகிரி மலைப் பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் பவானி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கடந்த 20-ஆம் தேதி, அணையின் நீர்மட்டம் 66 அடியாக இருந்தது. அதைத்தொடர்ந்து, அணைக்கு நீர்வரத்து 345 கன அடியில் இருந்து படிப்படியாக அதிகரித்து செவ்வாய்க்கிழமை, அணைக்கு 21 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் 73 அடியை எட்டியுள்ளது. அணையில் இருந்து பவானி ஆற்றுக்கு 200 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரி கூறுகையில், "பில்லூர் அணை முழுக் கொள்ளளவை எட்டியுள்ளதால் அங்கிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரால் பவானி அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது' என்றார்.

**நீலகிரி மாவட்டத்தில் பலத்த மழை**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

கூடலுர் மற்றும் உதகையில் பலத்த மழை பெய்ததால் பள்ளிகளுக்கு செவ்வாய்க்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டது.

திங்கள்கிழமை இரவு முதல் செவ்வாய்க்கிழமை காலை வரை நீலகிரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு (சென்டி மீட்டரில்):

அவலாஞ்சி 24.5 செ.மீ, கூடலூர் 14.5 செ.மீ, தேவாலா 14.9 செ.மீ, அப்பர்பவானி 12 செ.மீ, கிளன்மார்கன் 11.5 செ.மீ. என மாவட்டம் முழுவதும் 111.10 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

**கரும்பு வளர்ப்பு செயல்முறை விளக்கம்**

ஆரணி வட்டம், மெய்யூர் கிராமத்தில் உள்ள கரும்புத் தோட்டத்தில், குழி முறையில் உரம் வைத்தல் குறித்து விவசாயிகளுக்கான செயல்முறை விளக்கம் செவ்வாய்கிழமை நடைபெற்றது. ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சார்பில் பாவாடராஜன் என்பவரின் கரும்புத் தோட்டத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மேலாண்மை இயக்குநர் கா.ஜெயம் தலைமை வகித்துப் பேசியது: கரும்புப் பயிருக்கு குழிமுறையில் உரமிடுதல் மற்றும் சோகை உரித்து விட்டம் கட்டுதல் போன்ற தொழில்நுட்பங்களால் உரச் செலவினங்கள் குறைகின்றன.

சோகையை உரித்தால் கரும்புப் பயிரைத் தாக்கும் அனைத்துப் பூச்சிகளையும் எளிய முறையில் கட்டுப்படுத்த முடியும். இதனால் கூடுதலாக மகசூல் கிடைக்கும் என்றார் அவர்.

பின்னர் விவசாயிகளுக்குக் கரும்பு பயிருக்குக் குழிமுறையில் உரம் வைத்தல் குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் ஆரணி சேவூர் கோட்டம் கரும்பு அலுவலர் மு.வேலாயுதம் பேசியது:

குழிமுறையில் உரம் வைத்தால் உரம் வீணாகாமல் வேர் பகுதிக்குச் சென்று உரத்தின் முழுவதையும் பயிர் உறிஞ்சிக்கொள்ளும். இதனால் உரம் வீணாகாது. குறிப்பாக, உயிர் உரங்கள் அசிடோபேக்டர், பாஸ்போபேக்டீரியம், சூடாமோனாஸ் ஆகிய உயிர் உரங்கள் இந்த முறையில் இடுவதால் மண்ணின் கார, அமில உப்பு நிலைமாறி மண் வளம் பெறுகிறது. இதனால் கரும்பு மகசூல் இருமடங்குக் கூடுதலாக வரும் என்றார். இதில் ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் துணைத் தலைவர் ஆர்.அசோக்குமார், கரும்பு உதவியாளர்கள் சி.மனோகர், மதியழகன், கிருஷ்ணமூர்த்தி, கென்னடி, ராஜமன்னார், சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பாரம்பரிய சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க தீவிர நடவடிக்கை**

தமிழக அரசு பாரம்பரிய சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ்.

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் அருகே ஒடுகம்பட்டி கொளிஞ்சி உயிர்ச்சூழல் பண்ணையில் அண்மையில் (ஜூன்.19, 20) நடைபெற்ற இயற்கை விவசாயிகள் மாநாட்டில் சிறப்பு அழைப்பாளரா கப் பங்கேற்று சிறந்த இயற்கைவழி விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் விருது, விவசாயிகளுக்கு சிறுதானிய விதைகளை வழங்கிப் பேசியது:

கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழக அரசு பாரம்பரிய சிறுதானிய உற்பத் திக்காக பலவேறு முன் முயற்சிகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, புதுக் கோட்டை மாவட்ட விவசாயிகள் முழு ஆர்வத்துடன் இதில் ஈடுபட்டு பிற மாவட்டங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர்.

தற்போது அதிக மக்களை பாதிக்கின்ற எலும்பு சம்பந்தமான நோய்க ளுக்கு கால்சியம் பற்றாக்குறைதான் காரணம். அந்தச் சத்தை உடலுக்கு விரைவாக அளிக்கக்கூடிய கேழ்வரகை அனைவரும் உணவாக எடுத்துக்

கொள்ள வேண்டும். இதுபோல பல்வேறு நோய்களுக்கு சிறுதானியங்கள் மட்டும்தான் உணவு மருந்தாகச் செயலாற்றுகின்றன. மேலும், இயற்கை முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளும் அதிக எண்ணிக்கையில் இம்மாவட்டத்தில்தான் உள்ளனர். அதற்கு இயற்கை வேளாண் விஞ் ஞானி நம்மாழ்வாரின் அயராத உழைப்பே முக்கியக் காரணம்.

எனவே, வருங்காலத்தில் இயற்கை முறையில் விளையக்கூடிய உணவுப் பொருள்கள் சந்தையில் முக்கிய இடத்தைப்பிடிக்கும் என்பதில் சந்தேக மில்லை என்றார். மாநாட்டின் முதல்நாளில் உயிர்ச்சூழல் பசுமை கிரா மங்கள் குறித்த மாநில அளவிலான கருத்துப் பட்டறை, விதை கண்காட்சி நடைபெற்றது.

நிறைவுநாளிள் ஒடுகம்பட்டி ஊராட்சித் தலைவர் ராமசாமி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், குடும்பம் நிறுவன இயக்குனர் ஆஸ்வால்டு குவின்டால் கருத்துப் பட்டறையின் நோக்கமும் பின்னணியும் என்ற தலைப்பில் பேசினார். இதையடுத்து, தஞ்சை இயற்கை விவசாயி சித்தர், விழுப்புரம் ஐ.ஆர்.டி.எஸ். தலைவர், நிக்கோலஸ் தஞ்சை மரபுசார் கால் நடை ஆராய்ச்சி மையத் தலைவர் புண்ணியமூர்த்தி, இயற்கை விவசாயி கள் ஜி.எஸ். தனபதி, செல்வம், நெல்ஜெயராமன் ஆகியோர் கருத்துரை யாற்றினர்.

மாநாட்டில் மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்த ரம், வம்பன் பயிறு வகை ஆராய்ச்சி மையத் தலைவர் ஞானமலர், கூட்டுற வுத் துறை இணைப்பதிவாளர் கே.வி.எஸ். குமார், காரைக்கால் நமது உல கம் இயற்கை உழவாண்மை நடுவம் ஒருங்கிணைப்பாளர் முத்துக்கிருஷ் ணன், நஞ்சில்லா உழவர் இயக்க நிர்வாகிகள் அல்லில்பாக், பாஸ்கரன் உள்ளிட்டோர் வாழ்த்தினர். கொளிஞ்சிப் பண்ணை மக்கள் தொடர்பு அலுவலர் மணிவாசகம் வரவேற்றார். குடும்பம் நிறுவன இணை இயக்கு

நர் பங்கயவல்லி நன்றி கூறினார். இதில், தமிழகம் முழுவதுமிருந்து 500 - க்கும் மேற்பட்ட இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**திருந்திய நெல் சாகுபடி முறையை மேற்கொள்ள அறிவுறுத்தல்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு குறுவை சாகுபடிப்பருவத்தில குறைவான நீர் இருந்தாலும் அதிக மகசூல் தரக்கூடிய திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை மேற்கொள்ள வேண்டுமென வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நடப்பு குறுவை சாகுபடி பருவத்தில் தண்ணீர் குறைவாக உள்ள போதிலும் அதிக மகசூல் பெற விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் கூடுதல் லாபம் பெற முடியும். திருந்திய நெல் சாகுபடியில், தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் நெல் ரகங்களைப் பயன்படுத்த வேண்டும். ஒரு ஏக்கர் நெல் நடவு செய்ய 3 கிலோ நெல்விதை போதும். ஒரு ஏக்கர் நடவு செய்ய 1 சென்ட் (40 சதுர மீட்டர்) நாற்றங்கால் தேவை. அதன் மீது பாலித்தீன் விரிப்புகளைப் பரப்பி மரச் சட்டங்களை வைத்து மேட்டுப்பாத்தி அமைத்து அதில் மண் மற்றும் தொழுஉரம் நிரப்பி விதைக்க வேண்டும். நடவு வயல் துல்லியமாக சமன் செய்யப்பட வேண்டும். லேசர் துல்லிய சமன் செய்யும் கருவியைப் பயன் படுத்த வேண்டும். 10-14 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுக்களை நட வேண்டும். நாற்று நடுவதற்கு அடையாளமிடும் கருவியைப் பயன்படுத்த வேண்டும்.

22.5 செ.மீ ஷ் 22.5 செ.மீ (முக்கால் அடி) இடைவெளியில் சதுர முறையில் நட வேண்டும். ஒரு குத்துக்கு ஒரு நாற்று மட்டும் நட வேண்டும். நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 2.5 செ.மீ கனத்துக்கு அதிகமாக நீர் நிறுத்தக்கூடாது. கோனோவீடர் எனும் உருளும் களைக்கருவியை கொண்டு நடவு செய்த 10-ம் நாள் முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை என 4 முறை குறுக்கும் நெடுக்குமாகப் பயன்படுத்தி களையெடுக்க வேண்டும்.

இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தேவையான தழைச்சத்தை மேலுரமாக இட வேண்டும். இத்தகைய தொழில்நுட்பங்களைக் கடைப்பி டித்து சாகுபடி செய்யும் விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற முடியும் என் றார்.

**பயிர்க் கடனுக்கு வட்டி மானியம் வழங்க வலியுறுத்தல்**

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க் கடனுக்கு வட்டி மானியம் தொடர்ந்து வழங்க வேண்டும் என, தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தமிழக விவசாயிகள் சங்கத் தின் மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பி. மாணிக்கம், மாவட்டச் செயலர் ப. நீலகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், 33% பயிர் மகசூல் பாதிக்கப்பட்டாலும், வறட்சி பாதிப்புக்கு ரிய சலுகை வழங்க மத்திய அரசின் அறிவிப்பை அரசாணையாக வெளி யிட்டு, அதை செயல்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய வேளாண் பயிர்க் காப்பீடு திட்டத்தில் கடைப்பிடித்து வரும் கொள் கையில் மாறுதல் செய்து, அதே தவணையில் ஒரு கிராமத்தில் பயிர் பாதிக்கப்பட்டாலும் காப்பீட்டுத் தொகை கிடைக்கும் வகையில் மாறுதல் செய்ய வேண்டும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய பயிர் மற்றும் நகைக் கடனுக்கு மத்திய அரசு அளித்து வந்த வட்டி, மானிய கொள்கையில் மாறுதல் செய்யாமல் வட்டி மானியம் தொடர்ந்து வழங்க வேண்டும். விவசாய நிலங்களை கையகப்படுத்த பிறப்பித்த அவசர சட் டத்தை திரும்ப பெற வேண்டும், வன விலங்குகளால் விவசாய பயிருக்கு ஏற்பட்டு வரும் மகசூல் இழப்பை தடுக்க நான்கு வழிச்சாலையில் புளி, மா, கொய்யா போன்ற மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பதோடு, காட்டுப் பன்றியை வன விலங்கு பட்டியலில் இருந்து நீக்க மத்திய அரசு நடவ

டிக்கை எடுக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 5ஆம் தேதி கிருஷ்ணகிரியில் நடைபெற உள்ள உழவர் தின பேரணி, பொதுக்கூட்டத்தில் திரளான விவசாயிகள் பங்கேற்பது என உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பெரம்பலூர் மாவட்டத்தில் ஜூலை 1 முதல் பயிர்க் கடன் வழங்கும் சிறப்பு முகாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் பயிர்க் கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் ஜூலை 1 முதல் 21 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பயிர்க் கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம் ஜூலை 1 முதல் வருவாய் கிராமங்கள் வாரியாக சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நடை பெறவுள்ளது. இதுவரை பயிர்க் கடன் பெறாத விவசாயிகளுக்கு முன்னு ரிமை அளிக்கப்படும். இதற்கு முன் பயிர்க் கடன் பெற்றிருந்தால், அந்த கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தியிருக்க வேண்டும்.

தகுதியுள்ள விவசாயிகள் அண்மையில் பெற்ற கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்று, வங்கியில் சேமிப்பு கணக்கு இருந் தால் சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், பாஸ்போட் புகைப் படம் 2 மற்றும் வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் இரண்டு நகல்களுடன் முகாமில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

ஜூலை 1ஆம் தேதி பெரம்பலூர் வட்டம் எசனை, அலங்கிழி, குரும்பலூர் (தெ), குன்னம் வட்டம் நன்னை (கி), சு.ஆடுதுறை, ஓலைப்பாடி (கி), ஆலத்தூர் வட்டம் மேலமாத்தூர், நாரணமங்கலம், வரகுபாடி, வேப்பந்

தட்டை வட்டம் உடும்பியம், வாலிகண்டாபுரம், நூத்தப்பூர் (வ) ஆகிய கிராமங்களில் நடைபெற உள்ளது.

2ஆம் தேதி பெரம்பலூர் வட்டம் கீழக்கரை, குரும்பலூர் (வ), குன்னம் வட்டம் நன்னை (மே), பென்னகோணம் (வ), ஓலைப்பாடி (மே), ஆலத்தூர் வட்டம் அழகிரிபாளையம், நாட்டார்மங்கலம், காரை (கி), வேப்பந்தட்டை வட்டம் பூலாம்பாடி (கி), நூத்தப்பூர் (தெ), பிரம்மதேசம் ஆகிய கிராமங்களிலும்,

3ஆம் தேதி பெரம்பலூர் வட்டம் சத்திரமனை, அயிலூர், குன்னம் வட்டம் பெருமத்தூர் (வ), பென்னகோணம் (தெ), பரவாய் (மே), ஆலத்தூர் வட்டம் தொண்டபாடி, செ.மாவிலங்கை, காரை (மே), வேப்பந்தட்டை வட்டம் பூலாம்பாடி (மே), பசும்பலூர் (வ), அனுக்கூர் ஆகிய கிராமங்களில் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

**1,400 டன் பொதுரக அரிசி கன்னியாகுமரிக்கு ரயிலில் அனுப்பிவைப்பு**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்திலிருந்து 1,400 டன் பொதுரக அரிசி சரக்கு ரயில் மூலம் கன்னியாகுமரிக்கு செவ்வாய்க்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை, மன்னார்குடி வட்டக் கிடங்கு ஆகியவற்றிலிருந்து 116 லாரிகள் மூலம் பொதுரக அரிசி செவ்வாய்க்கிழமை நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது. பிறகு 1,400 டன் அரிசி மூட்டைகள் அனைத்தும் சுமை தூக்கும் தொழிலாளர்களைக் கொண்டு சரக்கு ரயிலின் 29 பெட்டிகளில் ஏற்றப்பட்டு பொது விநியோகத் திட்டத்துக்காக கன்னியாகுமரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெருஞ்சாணி அணையிலிருந்து 1000 கனஅடி உபரிநீர் வெளியேற்றம்**

குமரி மாவட்டத்தின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்துவருவதன் எதிரொலியாக பெருஞ்சாணி அணையிலிருந்து செவ்வாய்க்கிழமை விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டது.

சாரல் மழை: இம்மாவட்டத்தில் நிகழாண்டு பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகள் திறப்பதற்கு முன்பாக தொடர் கோடை மழையின் காரணமாக அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவுகளை நெருங்கியிருந்தன.

இந்நிலையில் கடந்த 2 ஆம் தேதி பாசனத்துக்காக அணைகள் திறக்கப்பட்டன. தற்போது தொடர்ந்து தென்மேற்குப் பருவமழை அறிகுறியுடன் சாரல் மழை பெய்து வருவதால் அணைகளில் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நீர்வரத்து அதிகரிப்பு: பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75 அடியைக் கடந்த நிலையிலும், செவ்வாய்க்கிழமை நிலவரப்படி அணைக்கு சுமார் 1000 கனஅடி நீர் வந்துகொண்டிருந்தது. அதேவேளையில், அணையிலிருந்து விநாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டது. மேலும், பாசனத்துக்காகவும் இந்த அணையிலிருந்து விநாடிக்கு 300 கனஅடி தண்ணீர் தொடர்ந்து திறந்துவிடப்பட்டுள்ளது. வெள்ள அபாயம்: இதனிடையே, பெருஞ்சாணி அணையிலிருந்து உபரியாக வெளியேறும் தண்ணீர் புத்தன் அணைக்கு வந்து, பின்னர் அங்கிருந்து பரளியாற்றில் சேருகிறது. இதனால் பரளியாறு பாயும் பகுதிகளான வலியாற்றுமுகம், மாத்தூர், திருவட்டாறு, மூவாற்றுமுகம் மற்றும் தாமிரவருணி பாயும் பகுதிகளான திக்குறிச்சி, குழித்துறை, காப்புக்காடு, முன்சிறை உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. மழை நீடித்து வருவதால்

சிற்றாறு அணைகளிலிருந்தும் உபரிநீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாசனத்துக்கு கூடுதல் நீர் தேவைப்படாது: இதுகுறித்து பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணி கூறியதாவது:

மாவட்டத்தில் கோடை மழையைத் தொடர்ந்து பருவமழையும் பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவுகளை நெருங்கி வருகிறது. பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகளில் ஏற்கெனவே வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்ட நிலையில் செவ்வாய்க்கிழமை பெருஞ்சாணி அணையிலிருந்து விநாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்படுகிறது. பாசனப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால் பாசனத்துக்காக கூடுதல் தண்ணீர் தேவையில்லை. இதனால் பெருஞ்சாணி அணையில் குறிப்பிட்ட நாள்கள் வரை 75 அடி அளவில் தண்ணீரை தேக்கி வைத்து விட்டு கூடுதல் உள்வரத்தாக வரும் தண்ணீரை பாசனக் கால்வாய் மற்றும் உபரியாக ஆற்றில் திறந்து விட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் சிற்றாறு அணைகளும் 16 அடியைக் கடந்துள்ள நிலையில் அந்த அணைகளிலிருந்தும் மறுகால் வழியாக தண்ணீர் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 42 அடியாக உள்ளதால் அந்த அணையின் பாசன மதகுகள் மூடப்பட்டுள்ளன. நீர்இருப்பை கருத்தில் கொண்டு அணைகளிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு மாறுபடும். அணைகள் நிரம்பியுள்ள நிலையில் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றார் அவர்.

மழையளவு: மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்):

பேச்சிப்பாறை 9, பெருஞ்சாணி 18.8, சிற்றாறு-1 34.2, சிற்றாறு -2 23.5, பொய்கை அணை 7.2, மாம்பழத்துறையாறு 26, ஆனைக்கிடங்கு 22, குருந்தன்கோடு 6.2, அடையாமடை 14, கோழிப்போர்விளை 17.5, முள்ளங்கினாவிளை 17, நாகர்கோவில் 15, பூதப்பாண்டி 12.8, சுருளோடு 20, கன்னிமார் 17.4, ஆரல்வாய்மொழி 7.2, பாலமோர் 12.5, மயிலாடி 21.6, கொட்டாரம் 14.5 மி.மீ. மழை பதிவானது.

**கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 6 அடியும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் மேலும் 7 அடியும் உயர்ந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையில் கடந்த சில தினங்களாக நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி, அதிகபட்சமாக கருப்பாநதி அணைப் பகுதியில் 38 மி.மீ. மழை பதிவானது. கொடுமுடியாறு அணையில் 17 மி.மீ., அடவிநயினார் அணையில் 13 மி.மீ. மழை பெய்தது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 800.93 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 335 கனஅடியும், கடனாநதி அணைக்கு 60 கனஅடியும், ராமநதி அணைக்கு 25 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 171 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 30 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 146 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்மட்டம் உயர்வு: நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மிதமான மழையால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. பாபநாசம் அணை நீர்மட்டம் 69.70 அடியாக இருந்தது. அணையிலிருந்து பாசனம், குடிநீர்த் தேவைக்காக 1,204.75 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் 73.98 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 82.40 அடியாக இருந்தது. மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் பாசனத்திற்கு 75 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

கொடுமுடியாறு அணை நீர்மட்டம் மேலும் 7 அடி உயர்ந்து 29 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்து 50.20 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணை நீர்மட்டம் 54 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 46 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 15.74 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் மேலும் 3 அடி உயர்ந்து 50 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 27 அடியாகவும், நம்பியாறு அணை நீர்மட்டம் 12.63 அடியாகவும் இருந்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பால், தண்ணீர், எண்ணெய் சோதனை: இந்திய தர ஆணையம் அதிரடி**

புதுடில்லி: மேகியை தொடர்ந்து, பால், தண்ணீர், சமையல் எண்ணெய் பாக்கெட்டுகளை பரிசோதிக்க, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர கட்டுப்பாட்டு ஆணையம் (எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ.,) உத்தரவிட்டு உள்ளது.

நாடு முழுவதும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவர்ந்த, நெஸ்லே நிறுவனத்தின், 'மேகி' நூடுல்சில், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகளவில் ரசாயன உப்பு, மற்றும் காரீயம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பொருட்கள் உடல் நலத்தை பாதிக்கும்

என்பதால், நாடு முழுவதும், இதன் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது.இதையடுத்து, நெஸ்லே நிறுவனத்தின் பல்வேறு தயாரிப்புகள், குளுகோஸ், பாஸ்தா, மெக்ரானி, உள்ளிட்ட பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவு பொருட்களின் தரத்தை பரிசோதித்த, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., அப்பொருட்களின் விற்பனைக்கும் தடை விதித்தது. இந்நிலையில், உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள, 'மதர் டெய்ரி' பால் பண்ணையில், பாலில் சோப்பு துாள் கலக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. இதை, அந்நிறுவன அதிகாரிகள் மறுத்துள்ளனர். இந்நிலையில், அனைத்து மாநிலங்களிலும் விற்பனை செய்யப்படும், பால், தண்ணீர் மற்றும் சமையல் எண்ணெய் பாக்கெட்டுகளை பரிசோதிக்க, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., உத்தரவிட்டு உள்ளது.

இவற்றின் மாதிரிகளை அதிகளவில் சேகரித்து, பரிசோதிக்கவும், இதுபோன்ற, மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் உணவு பொருட்களின் தரத்தை கண்காணிப்பது குறித்த வழிமுறைகளை, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., தனது அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது.

### புரதம் அதிகரிக்கும் பொருளுக்கு தடை:

புரதச் சத்தை அதிகரிப்பதாக கூறி விற்கப்பட்டு வரும், நான்கு மருந்துப் பொருட்களுக்கு, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர கட்டுப்பாட்டு ஆணையம் தடை விதித்துள்ளது.புரதச் சத்தை அதிகரிப்பதாக கூறி, மருந்துக் கடைகளில் விற்கப்பட்டு வரும், முல்மின் புரோ, முல்மின் சிரப், முல்மின் பிளஸ் கேப்சுல், முல்மின் ட்ராப்ஸ் ஆகிய நான்கு பொருட்களுக்கும், உடனடி தடை விதிக்கப்படுவதாக, உணவு பாதுகாப்பை கண்காணித்து வரும் அமைப்பான, இந்திய உணவு தர ஆணையம், நேற்று முன்தினம் அறிவித்தது. இதுதொடர்பாக,

இப்பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வரும், ஜக்தாலே இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துக்கு, தனித்தனி உத்தரவுகளை, இந்திய தர ஆணையம் பிறப்பித்துள்ளது. அந்த உத்தரவில், நான்கு பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் வினியோகத்தை உடனே நிறுத்துமாறும், கடைகளில் விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ள நான்கு பொருட்களையும் உடனே திரும்பப் பெறுமாறும் கூறப்பட்டுள்ளது.

**பலாவில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க அழைப்பு! தொழில் முனைவோர்களுக்கு அதிகாரி வேண்டுகோள்**



பண்ருட்டி : பலாப்பழம் மூலம் ஐஸ்கிரீம், சிப்ஸ், ஜாம், மாவு உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க முன் வரவேண்டும் என வேளாண்மை துணை இயக்குனர் தொழில் முனைவோர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பண்ருட்டி என்றாலே நினைவிற்கு வருவது பலாப்பழம்தான். "தானே' புயலுக்குப் பின் இந்த ஆண்டு, எதிர்பார்த்த அளவில் பலா உற்பத்தி அதிகமாகி தற்போது விவசாயிகளின் பணப்பயிராக உள்ளது. விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பலா முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், பலா மூலம் பதப்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயார் செய்து சந்தைப்படுத்த யாரும் முன் வரவில்லை.பலா

மரத்தில் இருந்து கிடைக்கும் பிஞ்சு, இளம்காய், பாதி முற்றிய காய், முற்றாத காய், நன்கு முற்றிய காய், பலாப்பழம், பலாக்கொட்டை, பலா சக்கை, பலாச்சுளை ஆகியவற்றிலிருந்து 100க்கும் மேற்பட்ட உணவு தயாரிப்புகள் கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தயாரித்து உண்ணும் பழக்கம் அதிகளவில் உள்ளது.


தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளில் 30க்கும் மேற்பட்ட பதப்படுத்தப்பட்ட பலா உணவுகள் பைகள், பாட்டில்களில் அடைக்கப்பட்டு அமெரிக்கா, இங்கிலாந்து, அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.ஆனால், இந்தியாவில் நாம், பலாவில் இருந்து சீசன் நாட்களில் பலாச்சுளையை மட்டும் ருசிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளோம். பதப்படுத்தி உண்ணும் முறை இல்லை. இலங்கையில் பலாக்கறி உணவுகள் முக்கிய உணவாக உள்ளது. பலாவில் இருந்து பல்வேறு உணவு வகைகளை தயாரிக்கலாம்.உதாரணமாக, பலாப்பிஞ்சு, இளம்காய் ஆகியவற்றை மரக்கறியாக உண்ணலாம். பதப்படுத்தி புட்டிகளில் அடைத்து உடனடி சமைக்கும் வடிவில் சந்தைப்படுத்தலாம்.பாதி முற்றிய காய் மற்றும் முற்றாத காயிலிருந்து சிப்ஸ், கட்லெட், பிரியாணி, குருமா அளவில் தயாரிக்கலாம். நன்கு முற்றிய காயிலிருந்து மஞ்சூரியன், உலர்ந்த பலாச்சுளை, அடை, பப்படம், ஆப்பம், தோசை, இட்லி, பலாச்சுளை பவுடர், ஊறுகாய் தயாரிக்கலாம்.

பழுத்த சுளையில் இருந்து அல்வா, வராட்டி, ஜூஸ், ஐஸ்கிரீம், கலவைப்பழ ஜூஸ், ஜாம், மில்க்ஷேக், மிட்டாய் வகைகள், பாயாசம், பேக்கரி வகைகள், பலாப்பழப்புட்டு, பலாப்பழ கொழுக்கட்டை, தேனில் ஊறிய பலாச்சுளை, மோதகம் எனப்படும் எண்ணெய் பலகாரம் தயாரிக்கலாம். பலா சக்கையிலிருந்தும், பலாச்சுளையிலிருந்தும் பலாக்கூழ் எடுத்து ஜாம், குல்பி போன்ற இனிப்பு பண்டங்கள்

தயாரிக்கலாம். பலாச்சுளையினை பதப்படுத்தி ஒயின் தயாரிக்கலாம். பலாக்கொட்டையினை பதப்படுத்தி காய்கறிக்கு மாற்றாக பலாக்கொட்டை மாவு தயாரித்து பகோடா முறுக்கு, மிட்டாய், வடை, பலாக்கொட்டை அல்வா, மைதா மற்றும் கோதுமை மாவுடன் கலந்த சப்பாத்தி, ரொட்டி, பேக்கரி தயாரிப்புகள் செய்யவும், உப்புமா செய்யவும், அவியல், பொறியலாகவும் பயன்படுத்தலாம்.பலா உணவுகளில் 10 சதவீதத்திற்கு மேல் மாவு சத்து, 2 சதவீதம் புரதசத்து சிறதளவு கொழுப்பு, மற்றும் பாஸ்பரஸ், கால்சியம், பொட்டாசியம், இரும்பு ஆகிய தாது பொருட்கள் நார் சத்துகளும், வைட்டமின் ஏ, பி, சி போன்ற உடல் நலம் காக்கும் உணவு சத்துகள் உள்ளன.

நீரிழிவு நோயாளிகள் பலாப்பிஞ்சு, முற்றாத காய்களை அவியல், பொறியல், குருமா செய்து சாப்பிடலாம். ரத்த அழுத்த நோயாளிகள் ரத்த அழுத்தத்தைக் குறைக்க பலாக்காய் மற்றும் பலா கொட்டைகளை அதிகமாக உண்ணலாம். பலாவில் இருந்து பிரித்தெடுக்கப்படும் ஜாக்குலின் எனப்படும் பொருள் புற்றுநோய் தீவிரத்தைக் குறைப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.தொழில் முனைவோர்கள் பலாப்பழம் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்க முன் வரவேண்டும். அப்படி முன் வந்தால் பலாப்பழ விவசாயிகள் பொருளாதாரத்தில் மேலும் உயர வாய்ப்பு உள்ளது. தொழில் முனைவோர்கள் இது குறித்து தகவல்கள் பெற 94430 74620 மொபைல் எண்ணில் வேளாண்மை துணை இயக்குனர் ஹரிதாசை தொடர்பு கொள்ளலாம்.

**வறண்ட சிவகங்கையில் பலாப்பழம் விளைச்சல் - ஏக்கருக்கு ரூ.1 லட்சம் லாபம்**


சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் அருகே கல்லுவழியில் இயற்கை உரம் மூலம் பலா மரங்களை வளர்த்து, ஆண்டு தோறும் ஏக்கருக்கு ரூ.ஒரு லட்சம் சம்பாதித்து வருகிறார் விவசாயி எம்.ஆபிரகாம் அவர் கூறும்போது:

கிராமத்தில் மா, பலா, தென்னை, கொய்யா உள்ளிட்ட பழ பண்ணை வைத்து, அதில் ஆடுகள் வளர்க்கிறேன். இதற்காக மா, பலா, தென்னை மரங்களுக்கு இடையே சொட்டு, தெளிப்பு நீர் பாசன கருவி மூலம் தண்ணீர் தெளித்து பசும்புற்கள் வளர்க்கிறேன். இவை ஆடுகள் மேய்ச்சலுக்கு பயன்படுகின்றன. ஆடு, கோழி கழிவுகளை மட்டுமே விவசாயத்திற்கு உரமாக பயன்படுத்துகிறேன். இங்கு 200 ஏக்கரில் 2,000 பலா மரங்களை நடவு செய்துள்ளேன். முதற்கட்டமாக வைத்த 500 பலா

மரங்களுக்கு இயற்கை உரங்கள் போட்டு, சொட்டு, தெளிப்பு நீர் கருவி மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். பலா மரக்கன்றுகள் நட்ட 4 ஆண்டுக்கு பின் பழம் விளைச்சல் துவங்கியது. கடந்த 15 ஆண்டாக 500 மரங்களில் இருந்து மார்ச் முதல் ஜூன் வரை பலா பழம் விளைச்சல் இருக்கும். ஏக்கருக்கு 75 முதல் 150 மரங்கள் வரை நடவு செய்துள்ளேன். ஒரு மரத்தில் இருந்து ஆண்டுக்கு 100 முதல் 200 பழங்கள் விளையும். பழம் 10 முதல் 20 கிலோ எடை இருக்கும். வறண்ட சிவகங்கையில் நிலத்தடி நீருக்கு தட்டுப்பாடு நிலவியபோதும் இருக்கும் தண்ணீரை சேமித்து விவசாயம் செய்யும் நோக்கில் சொட்டு நீர் பாசனத்தில் சிங்கப்பூர் ஒட்டு, நாட்டு ரக பழங்கள் விளைகின்றன. பலா பழ விளைச்சல் மூலம் ஆண்டுக்கு ஏக்கருக்கு செலவு போக ரூ.1 லட்சம் கிடைக்கும், என்றார். அலைபேசி 98431 85444.

**வெங்கடேசன், சிவகங்கை.**

**மூலிகைப்பூச்சி விரட்டியாக பயிர் காக்க உதவும் தாவரங்கள் பல!**

பூச்சி தாக்குதலால் பாதிப்பு வந்தால் ரசாயன மருந்துகள் ஊறுவிளைவிப்பதால் (நமக்கு மட்டுமல்ல கால்நடைகளுக்கும் சேர்த்து தான்). அவற்றை நிறுத்தி மூலிகைப்பூச்சி விரட்டி பயன்படும். இதற்கு பூச்சிகளை சாகடிக்க வேண்டாம். இனப்பெருக்கம் செய்ய விடவும் வேண்டாம். விரட்டினாலே போதும். அவை தானாக குறைந்து பொருளாதார சேத நிலைக்குள் கட்டுப்பட்டு வாழ்வதற்கும் நமது சுற்றுச்சூழல் மாசுபடாமல் நலமான வாழ்வை நாம் வாழவும் வழி பிறக்கும்.

விவசாயிகள் தோட்டத்தில் சுற்றிப் பார்த்து கிடைக்கும் பல மூலிகைகளில் குறிப்பாக கால்நடைகள் உண்ணாதவை, கசப்பான சுவை கொண்டது. துர்நாற்றம் வீசுபவை மற்றும் பசையும் விஷத்தன்மையும் கொண்டதாக இருப்பது எது என சேகரித்து மண்புழுக்களை பாதிக்காதவைகள் தேர்வு

செய்து பயன்படுத்தலாம்.
குறிப்பாக எல்லாப்பகுதிகளில் வேலியிலும் பிற பகுதியிலும் வளர்ந்துள்ள மூலிகைகளில் நொச்சி இலை, சங்குப்பூ இலை, எருக்கம்பூ இலை, சோற்றுக் கற்றாழை இலை, வேப்பம் இலை, ஆடாதோடா இலை, கருவேலம் இலை, புங்கமர இலை மற்றும் விதைகள் அரளிப்பூ இலைகள் மற்றும் விதைகள், காட்டாமணக்கு இலைகள், ஊமத்தையின் இலைகள் மற்றும் காய்கள், சீதாப்பழ இலைகள் மற்றும் காய்கள், பப்பாளி இலைகள் புகையிலையின் உவர்தூள், உண்ணிச்செடி இலைகள், விளாம்பழ இலைகள், பிரண்டை யில் அனைத்து பாகங்களும், மஞ்சத் தூள், தும்பைச்செடி, காக்காச் செடி, காட்டுப்புகையிலை மற்றும் ஆர்டீமிங்சியா இலைகள் இவற்றுள் குறைந்த பட்சம் 10 தாவரப் பொருட்களில் இருந்து தலா 0.500 கிலோ வீதம் எடுத்துக் கொண்டு 20 லிட்டர் பசுங்கோமியம் மற்றும் 2 கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றைக் கலந்து பிளாஸ்டிக் கொள் கலனில் அடைக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு இருமுறை கலக்க வேண்டும்.
இவை 10 முதல் 15 நாட்களில் நொதித்தல் முறையில் தயாராகி விடும் இவற்றை வடிகட்டி தெளிவான கரைசலைக் கொண்டு தயாரிக்கலாம். இலை 10 முதல் 15 நாட்களில் நொதித்தல் முறையில் தயாராகி விடும். மற்றொரு முறையில் குறைந்தது 10 தாவரங்களின் பொருட்களை 15 லிட்டர் தண்ணீரில் கலந்து மண்பானையில் 3 மணி நேரம் கொதிக்க வைத்து இறக்க வேண்டும். இதை குளிர்ச்சி அடைந்ததும் 2 கிலோ மஞ்சள் தூள் சேர்த்து 12 மணி நேரம் வைக்க வேண்டும்.
இதன் பிறகு வடிகட்டி இலைவழித் தெளிப்பு செய்தால் அதாவது இதில் 5 லிட்டர் எடுத்து 100 லிட்டர் நீரில் கரைத்து தெளித்தால் போதும். பூரண பயிர்பாதுகாப்பு அனைத்து வித பூச்சிகள் தாக்குதலின்றி கிடைக்கும். இவை பயிர் ஊக்கியாகவும் செயல்படுவது இன்னொரு சிறப்பு.

- டாக்டர்பா.இளங்கோவன்,

உடுமலை.

***சின்ன சின்ன செய்திகள்***



நலம் தரும் சிறுதானிய உணவுகள் - பனிவரகு சர்க்கரைப் பொங்கல் : தேவைப்படும் பொருட்கள் - பனிவரகு 1 கப், பாசிப்பருப்பு 1/4 கப், வெல்லம் 3/4 கப், ஏலப்பொடி 1/4 தேக்கரண்டி, நெய்-2 தேக்கரண்டி. நெய்யில் வறுத்த முந்திரி மற்றும் திராட்சை தேவைக்கேற்ப. செய்முறை : பாசிப்பருப்பை வெறும் வாணலியல் வாசனை வரும் வரை வறுத்துக் கொள்ளவும். சுத்தம் செய்த பனிவரகு, பாசிப்பருப்பு தேவையான நீர்சேர்த்து வேக விடவும். வெல்லத்தைக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். வெந்த பனிவரகு, பாசிப்பருப்பு கலவையில் வெல்லம் சேர்த்துக் கிளறி கொதிக்க விடவும். ஏலப்பொடி, நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை சேர்க்கவும். நெய் சேர்த்துக் கிளறி பரிமாறவும். தகவல் : கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், 53, 53, B=Block, Ponni Apartments, 10/14 Ganapathy 1st Street, Avvainagar, Thiruvanmiyur, Chennai-600 041.

மாட்டுப் பண்ணை வைக்க : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி வழங்கி வருகின்றன. குறிப்பாக பாரத ஸ்டேட் வங்கியின் "டெய்ரிபிளஸ்' என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்

கீழ் இரண்டு மாடுகள் கொண்ட சிறிய பால்பண்ணை முதல் நூற்றுக்கணக்கான மாடுகள் கொண்ட பெரிய அளவு பால்பண்ணை அமைப்பது வரையிலும் கடன் உதவி பெறலாம். தகவல் : பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் மேலாளரும், கால்நடை மருத்துவருமான ஓ.ஹென்றி பிரான்சிஸ்.

கீரைகளின் பயன்கள் - அரைக்கீரை : ஜலதோஷத்தினால் ஏற்படும் சளி, இருமல், தொண்டைப்புண் குணமாகும்.. இருதயம், மூளை வலுப்பெறும் மலட்டுத்தன்மை அகலும். மலச்சிக்கல் சீராகும். உடல்சூட்டை சமநிலைப் படுத்தும்.

முளைக்கீரை : குழந்தைகளின் உடல்வளர்ச்சிக்கும் மூளை வளர்ச்சிக்கும் ஏற்றது. சரும நோய், சொரி சிரங்கு குணமாகும். தலைமுடி நரைக்காது. கருமையுடன் இருக்கும்.

சிறுகீரை : சிறுநீரக சக்தி உண்டாகும். நோய்களைக் குணமாக்கும். காசநோய் கண் நோய்களை நீக்கி உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். பொன்னாங்கண்ணிகீரை : கண்களை பொன்போல காக்கும். பொன்னாங்கண்ணி தைலத்தை தேய்த்து குளித்தால் உடல்சூடு குறையும். உடல் மினுமினுப்பாகும்.

லெட்ச கெட்டக்கீரை : பொடியாக நறுக்கி வெங்காயம், தயிருடன் ஊறவைத்து பச்சையாக உண்ணலாம். வேகவைத்தால் சத்து பாதியாகக் குறையும். சிறுநீரக கோளாறு, கல்லீரல், இதயம், குடல் வலுப்பெறும். இரத்த சோகை நீங்கும். நரம்பு தளர்ச்சி நீங்கும்.

புளிச்ச கீரை : பலவீனமான உடல் தேறிட முதன்மையானது. சட்னி செய்து சாப்பிட சொரி, சிரங்கு அகலும்.

வெந்தயக்கீரை : இரும்புச்சத்து நிறைந்தது. சமைத்தால் மணக்கும். சாப்பிட்டால் குளிர்ச்சி தரும்.

மலைவேம்பு : வேகமாக வளரக்கூடிய மரவகைகளில் ஒன்று மலைவேம்பு சில ஆண்டுகளாக இந்த மரத்தை சாகுபடி செய்பவர்கள் எண்ணிக்கை

அதிகரித்து வருகிறது. மலைவேம்பு மரம் நீர்வளம் உள்ள பகுதியில் மட்டுமே நன்றாக வளர்ச்சியைக் கொடுக்கும். மானாவாரி நிலத்தில் சாகுபடி செய்தால் நிச்சயம் லாபம் கிடைக்காது. அனுபவ விவசாயி ஒருவர் 6ஜீ6 அடி இடைவெளியில் ஏக்கருக்கு 1200 மலைவேம்பு கன்றுகளை நடவு செய்து, மண்ணில் ஈரம் காயாமல் பாசனம் செய்தால் தேவையான உரங்களாக கொடுத்து வந்தால் 18 மாதங்களில் 30 அடி உயரம் வரை வளர்ந்துள்ளன. 600 மரங்களை அறுவடை செய்து பார்த்ததில் 25 டன் மகசூல் கிடைத்தது. ஒரு டன் 4400 ரூபாய் என்று விலைக்கு வாங்கிக் கொள்வார்கள். தொடர்புக்கு : 04254 - 222 010.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## இனி, தினமும் இனிக்கும் சிறுவாணி!நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வரலாறு காணாத மழை: ஒரே நாளில் அணை நீர்மட்டம், 2.67 மீட்டர் உயர்வு

கோவை;சிறுவாணி அணைப் பகுதியில், நேற்று முன்தினம் வரலாறு காணாத வகையில், 212 மி.மீ., மழை பெய்தது. இதனால், ஒரே நாளில், அணையின் நீர்மட்டம், 2.67 மீ., உயர்ந்துள்ளது.

கோவை மாநகராட்சி மற்றும் வழியோர கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி அணை, மேற்கு தொடர்ச்சி மலையில், கேரள மாநில வனப்பகுதியில் உள்ளது. கடல் மட்டத்தில் இருந்து, 863.4 மீட்டர் உயரத்தில் உள்ள சிறுவாணி அணையில், 878.5 மீட்டர் வரையிலும் (15.1 மீட்டர் உயரத்துக்கு) தண்ணீர் தேக்க முடியும்.

கடந்தாண்டு, ஆகஸ்ட் மாதம் முதல் தேதி சிறுவாணி அணை நிரம்பியது. தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேலாக அணை நிரம்பி வழிந்தது. மழை காலத்திற்கு பிறகு, நீர்மட்டம் குறையத் துவங்கியது.கடந்த, 19ம் தேதி நிலவரப்படி, சிறுவாணி அணையில், 1.7 மீட்டர் உயரத்துக்கு

நீர்மட்டம் இருந்தது. தென்மேற்கு பருவமழை, கடந்த 9ம் தேதி முதல் பெய்யத்துவங்கினாலும், 19ம் தேதி முதல் தீவிரமடைந்துள்ளது.

கடந்த, 10 நாட்களில், சிறுவாணி வனத்தில், 98 மி.மீ., அடிவாரத்தில், 149 மி.மீ., மழை பெய்தது. இதனால், அணை நீர்மட்டம், 2.78 மீட்டராக உயர்ந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் காலையில் துவங்கி தொடர்ந்து கனமழை பெய்தது. நேற்று காலை 8:00 மணி வரையான, 24 மணி நேரத்தில், சிறுவாணி அணையில், 212 மி.மீ., மழை பெய்தது; அடிவாரத்தில், 76 மி.மீ., மழை பெய்தது. சிறுவாணி அணையில் கடந்த நான்கு ஆண்டுகளில், கடந்தாண்டு ஆகஸ்ட் மாதம் அதிகபட்சமாக, 202 மி.மீ., மழை பெய்தது. ஆனால், நேற்று ஒரே நாளில், 212 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. முக்கிய நீர்ஆதாரங்களான முத்திகுளம், சோலையாறு, யானையாறுகளில், தண்ணீர் ஆர்ப்பரித்தபடி, சிறுவாணி அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால், நேற்று ஒரே நாளில், சிறுவாணி அணையில், 2.67 மீட்டர் நீர்மட்டம் உயர்ந்தது; அணையில், 5.45 மீட்டர் உயரத்துக்கு தண்ணீர் தேங்கியுள்ளது. சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், குடிநீர் வினியோக அளவு, 78 மில்லியன் லிட்டரில் இருந்து, 101.4 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டது. இதனால், மாநகரம் மற்றும் வழியோர கிராமங்களில், தினமும் சிறுவாணி குடிநீர் வினியோகம் செய்யும் சூழல் உருவாகியுள்ளது.

மண் சரிவு: சிறுவாணி வனப்பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்கிறது. இதனால், அணைக்கு செல்லும் வழியில், பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. மூங்கில் துார்கள் வேரோடு பெயர்ந்து விழுந்ததால், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் அணைப்பகுதிக்கு செல்ல முடியாமல் அவதிப்படுகின்றனர்.

அதேபோன்று, சாடிவயலில், மலை அடிவாரத்தில் உள்ள, குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் வழியில், நேற்றும் மரங்கள் சரிந்து விழுந்தன. 'பொக்லைன்' வாகனம் மூலம், வழித்தடத்தை சுத்தப்படுத்தி அதிகாரிகள் சென்று வருகின்றனர். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில், 'இந்தாண்டு கனமழை பெய்வதால், அணை முன்கூட்டியே நிரம்ப வாய்ப்புள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு சிறுவாணியில் மழை பெய்து வருகிறது' என்றனர்.

## அமராவதி அணை திறப்பு எப்போது மவுனம் ஏன்?: ஆயக்கட்டு விவசாயிகள் காத்திருப்பு




உடுமலை:உடுமலை அமராவதி அணையில் இருந்து, பாசனத்துக்கு தண்ணீர் திறக்க உத்தரவிடாமல், அரசு மவுனம் காப்பதால், ஆயக்கட்டு விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.உடுமலை அமராவதி அணையில் இருந்து திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள, 55 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்களுக்கு, தண்ணீர் வழங்கப்படுகிறது. வழக்கமாக, பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு உட்பட்ட, 29 ஆயிரம் ஏக்கருக்கு, அணையில் இருந்து ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படும். சில

ஆண்டுகளாக பருவமழை குறைந்ததால், ஜூன் மாதத்தில், ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை.இந்தாண்டு, கோடை காலத்தில் நல்ல மழை பெய்ததால், அணை நீர் மட்டம் உயர்ந்தது. தற்போது, 90 அடியுள்ளஅணையில், 54.43 அடி நீர் மட்டம் உள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியான, கேரள மேற்குத்தொடர்ச்சி மலையில், தென்மேற்கு பருவமழை துவங்கி, நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

எனினும், பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு, அணையில் இருந்து இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால், நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் கூட விடாமல், விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். கரும்பு விவசாயிகளும், சாகுபடிக்கு முந்தைய பணிகளை துவக்கவில்லை.விவசாயிகள் கூறுகையில், "ஜூன் துவக்கத்தில், அணையில் இருந்து தண்ணீர் திறந்தால் மட்டுமே, நெல் சாகுபடியை மேற்கொள்ள முடியும். இதுகுறித்து அரசுக்கு பலமுறை கோரிக்கை அளித்தும், எவ்வித நடவடிக்கையும் இல்லை. தாமதமாக தண்ணீர் திறந்தால், நெற்பயிர்கள் வளர்ந்து, அறுவடை பணி மேற்கொள்ளும்போது, வடகிழக்கு பருவமழை துவங்கி, பலத்த சேதத்தை ஏற்படுத்தும். இதேபோல், கரும்பு சாகுபடியும் பாதிப்படையும். பாசனத்துக்கு தேவையான தண்ணீர், அணையில் இருந்தும், திறந்து விடப்படாதது வேதனை அளிக்கிறது,' என்றனர்.பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "விவசாயிகளின் கோரிக்கை, அரசுக்கு கருத்துருவாக அனுப்பப்பட்டது. கடந்த, 16ல் தண்ணீர் திறக்க, துறை சார்பில் அளிக்கப்பட்ட கருத்துருவுக்கு அரசிடம் இருந்து உத்தரவு வரவில்லை. வரும், 26ல் அணையில் இருந்து தண்ணீர் திறக்க, அரசுக்கு மீண்டும் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது,' என்றனர்.அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில், மடத்துக்குளம் வட்டார

வேளாண் விரிவாக்க மையத்தில், 28 டன் நெல் விதைகள், இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**கோவையில் தென்மேற்கு பருவமழை தீவிரம்: நொய்யல் ஆறு மூலம் 27 குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு ஆக்கிரமிப்பால் வெள்ளலூர் குளத்துக்கு நீர் வரத்து தடைபடுகிறது**



கோவை பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. இதனால் நொய்யல் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் 27 குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. ஆனால் ஆக்கிரமிப்பால் வெள்ளலூர் குளத்துக்கு தண்ணீர் செல்வது தடைபட்டுள்ளது.

<u>கோவையில் மழை</u>

கோவையில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதனால் மேற்கு தொடர்ச்சி மலை யை ஒட்டியுள்ள பகுதிகளில் பலத்த மழை பெய்வதால் நொய்யல் ஆற்றுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

கோவையில் இருந்து சாமளாபுரம்வரை நொய்யல் ஆற்றில் வெள்ளமாக பாய்ந்து செல்கிறது. இதன் காரணமாக குளங்களுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதுகுறித்து குளங்கள் பாதுகாப்புக்கான பொதுப்பணித்துறை என்ஜினீயர் குமாரசாமி கூறியதாவது:–

<u>27 குளங்களுக்கு தண்ணீர்</u>

தென்மேற்கு பருவமழை காரணமாக நொய்யல் ஆற்றில் தண்ணீர் பாய்ந்து செல்வதால் கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள 27 குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. வெள்ளலூர் குளத்தின் நீர்வழித்தடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் இந்த குளத்துக்கு மட்டும் தண்ணீர் செல்லவில்லை. இந்த ஆக்கிரமிப்பை அகற்றவும், நீர்வழித்தடத்தில் குடியிருப்பவர்களுக்கு வேறு இடம் ஒதுக்கவும் மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். வெள்ளலூர் குளத்துக்கு தண்ணீர் செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து இருப்பதன் மூலம் நிலத்தடி நீர் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. கோவையில் மேலும் சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் கோவையை சுற்றிஉள்ள குளங்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு பொதுப்பணித்துறை என்ஜினீயர் குமாரசாமி கூறினார்.

<u>நொய்யல் ஆக்கிரமிப்பு</u>

நொய்யல் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடினாலும், பேரூர் உள்ளிட்ட ஒருசில பகுதிகளில் பகுதிகளில் நொய்யலில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. மேலும் நொய்யல் ஆற்றின் நீர்வழித்தட பகுதிகளில் புதர்கள் மண்டி கிடப்பதால் முழு அளவில் தண்ணீர் பாய்ந்து செல்ல

முடியவில்லை. எனவே நொய்யல் ஆற்றை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
நொய்யல் ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக கோவை சுண்ணாம்பு காளவாய் தடுப்பணை யில் தண்ணீர் அருவிபோல் கொட்டுகிறது. இதனை அந்த பகுதியை சேர்ந்த ஏராளான பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்தனர்.

தினகரன்

**நிர்ணயிக்கப்பட்ட விலையில்ரூ.6 கோடிக்கு இடுபொருட்கள்**

கரூர், . குளித்தலை நச்சலூரில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் (பார்மர்ஸ் புரடியூசர் கம்பெனி) செயல்படுகிறது. இங்கு விவசாயிகளுக்கு தேவையான வேளாண் இடுபொருட்கள், தரமான விதை, உபகரணங்கள், மருந்து வகை நிர்ணயிக்கப்பட்ட விலையில் பெற்றுக்கொள்ளலாம். நபார்டு வங்கி நிதியுதவியுடன் நச்சலூர், நடையனூர் விவசாயிகள் மூலம் இந்நிறுவனம் செயல்படுகிறது. உற்பத்தியாகும் வேளாண் பொருட்களை கொள்முதல் செய்து குறித்த நேரத்தில் நல்ல விலைக்கு விற்பனை செய்வது இந்நிறுவனத்தின் நோக்கம். முன்னோடி விவசாயி கரிகாலன் தலைமையில் 150 விவசாயிகள் ஒருங்கிணைத்து விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் செயல்படுகிறது. தலா ரூ.25 ஆயிரம் முன்பணம் செலுத்தி நச்சலூர் விவசாய உற்பத்தியாளர் சங்கம் செயல்படுகிறது.
விவசாயிகள் தனியாரிடம் அதிக விலைக்கு இடுபொருள், உரம் வாங்கி வருகின்றனர். இதுவும் குறித்த நேரத்தில் கிடைக்காது. ஆனால் இந்நிறுவனத்தில் நெல், தானிய விதை, உரம், பூச்சி மருந்து அரசு

நிர்ணயித்த விலையில் வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.5 கோடிக்கு இடுபொருட்கள், உரவகைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் காலநிலை தெரிவிப்பது, எந்த மாதிரியான பயிர் செய்யலாம், நோய்களை கண்டறிந்து உரிய மருந்துகளை பயன்படுத்துவது குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் எந்தவித நஷ்டமும் அடையாமல் 100 சதவீதம் லாபம் அடையலாம் என இந்த நிறுவனத்தை ஆய்வு செய்த கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார். விவசாயிகளின் உற்பத்தி பொருட்களை சுத்தம் செய்து கொடுக்க ரூ.44லட்சம் கடன்வழங்கி இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது. தற்போது குஜராத் மாநில முன்னோடி விவசாயிகள் விருதுநகரில் கொள்முதல் செய்த சோளம் தானிய வகைகளை இங்கு சுத்தம் செய்து அரபுநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். ஒரு மூட்டை தானியம் சுத்தம் செய்ய தனியாருக்கு ரூ.400. ஆனால், இங்கு ஒருமூட்டை (50கிலோ) சுத்தம் செய்ய ரூ.100தான் கட்டணம். இதுவரை பிறமாநில விவசாயிகள் சுமார் 3 ஆயிரம் டன் சுத்தம் செய்து எடுத்து சென்றுள்ளனர். இதேபோல வேலாயுதம்பாளையம் நடையனூரில் தென்னை விவசாயிகள் 500 பேர் சேர்ந்து நபார்டு வங்கியில் ரூ.40 லட்சம் கடன் பெற்று நடையனூர் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்து, குறைந்த விலையில் இடுபொருள், இயந்திரம், மரவள்ளிக்கிழங்கில் மாவு சத்து கண்டறிதல், கால்நடை தீவன உற்பத்தி, நல்லெண்ணை உற்பத்தி, போன்ற சேவைகளை அளிக்கின்றனர். கடந்த 2 ஆண்டுகளில் விவசாயிகளுக்கு ரூ.1 கோடிக்கு வேளாண் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நபார்டு வங்கி மேலாளர் பார்த்திபன், வேளாண் அறிவியல் மைய அலுவலர் திரவியம் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**தமிழகத்தில் பரவலாக மழை அணைகள் நீர்மட்டம் கிடுகிடு உயர்வு**




ஈரோடு: தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்தது. கூடலூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் ஓடை மற்றும் சிற்றாறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு காசின்வயல், பொக்காகாடு, மாங்குணி ஆகிய பகுதிகளில் உள்ள 20க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. தீயணைப்பு துறையினர் விரைந்து வந்து தண்ணீரில் தத்தளித்த மக்களை மீட்டு அருகில் உள்ள மண்டபங்களில் தங்க வைத்தனர். கோவை மாவட்டம் சிறுவாணி அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால், சித்திரைவாடி-திருப்பூர் வரையிலான நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையொட்டி, கரையோரம் உள்ள குளங்களில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பவானி அணை 2 அடி உயர்வு: பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டம் ஊட்டி, குன்னூர், குந்தா, கோத்தகிரி, கூடலூர் பகுதிகளிலும், வடகேரளாவின் முள்ளி, அகளி, சாலையூர் போன்ற பகுதிகளிலும் கடந்த 4 நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன்காரணமாக பவானி ஆற்றின் வழியாகவும், மோயாறு பள்ளத்தாக்கு வழியாகவும் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 69.88 அடியாகவும், நீர்வரத்து 8261 கனஅடியாகவும் இருந்தது. நேரம் செல்ல, செல்ல நீர்வரத்து படிப்படியாக உயர்ந்து இரவு 10 மணியளவில் அதிகபட்சமாக அணைக்கு 14,372 கனஅடி தண்ணீர் வந்தடைந்தது. தொடர் நீர்வரத்து அதிகரிப்பால் அணையின் நீர்மட்டம், நேற்று காலை 8 மணி நிலவரப்படி 71.26 அடியை எட்டியது. அணைக்கு 9884 கனஅடி நீர்வரத்து இருந்தது. ஒரேநாளில் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது.

தாமிரபரணி மக்களுக்கு எச்சரிக்கை: குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. மலையோர பகுதிகள் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் சாரல் மழை காணப்படுகிறது. தொடர் மழை காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணையோர பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. நேற்று காலை நிலவரப்படி 77 அடியை கொண்ட பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75.23 அடியாக உயர்ந்தது. மேலும், 969 கனஅடி நீர்வரத்து காணப்பட்டது. இதனால், நேற்று பிற்பகலில் இருந்து வினாடிக்கு 400 கன அடி வீதம் உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. அணையில் உபரிநீர் திறக்கப்பட்டதால் தாமிரபரணி ஆற்றில்குழித்துறை தாமிரபரணி ஆற்றின் கரையோர பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**சூறைக்காற்றால் ரயில்கள் நிறுத்தம்**

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் தீவில் நேற்று மாலை பலத்த காற்று வீசியது. நேற்று மாலை 6 மணிக்கு ராமேஸ்வரத்தில் இருந்து புறப்பட்ட மதுரை பயணிகள் ரயில் 6.10 மணிக்கு பாம்பன் வந்தது. மணிக்கு 55 கி.மீ வேகத்தில் காற்று வீசியதால், சிக்னல் கிடைக்கவில்லை. இதனால், 6.15 மணிக்கு புறப்பட வேண்டிய இந்த ரயில் பாம்பனில் நிறுத்தி வைக்கப்பட்டது. நேற்று இரவு 8 மணி வரை

இந்த ரயில் புறப்படவில்லை. மேலும் நேற்று இரவு 8 மணிக்கு சென்னை புறப்பட இருந்த சேது எக்ஸ்பிரஸ் ரயிலும், ராமேஸ்வரம் ரயில் நிலையத்திலேயே நிறுத்தப்பட்டது. இதனால் பயணிகள் அவதியடைந்தனர்.

**விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவு**

திருவள்ளூர், : விவசாயிகளுக்கு தட்டுபாடின்றி உரம் கிடைத்திட நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு கலெக்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார். திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கத்தில் மாவட்ட திட்டக்குழு ஆய்வு கூட்டம் நடந்தது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி தலைவர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், கல்வித்துறை, அனைவருக்கும் கல்வி இயக்ககம், வேளாண்மைத்துறை, சுகாதாரத் துறை, போக்குவரத்துத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை, கால்நடை பராமரித்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்வாரியம், மாநில சமச்சீர் வளர்ச்சித்திட்டம் ஆகிய துறைகளில் இந்த ஆண்டு செயற்படுத்தப்பட்ட திட்டம் மற்றும் செயல்படுத்தப்பட உள்ள திட்டம் குறித்து சம்மந்தப்பட்ட துறைகளிடம் கலெக்டர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் கலெக்டர் கூறுகையில், ''திருவள்ளூர் மாவட்டத்தில் கல்வியாண்டு தொடக்கத்திலேயே அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லா பாடபுத்தகம், நோட்டுபுத்தகம், சீருடை மற்றும் உபகரணம் வழங்கப்பட்டுவிட்டது. இந்தாண்டு 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 90 சதவிகித்திற்கு மேல் தேர்ச்சி விகிதம் நமது மாவட்டம் பெற்றுள்ளது. மேலும் செம்மை நெல், சிறுதானிய சாகுபடியை அதிகப்படுத்தவேண்டும். அரசு மானியத்தில் வழங்கப்படும் சோலார்

மோட்டார்களை விவசாயிகளுக்கு வழங்கிடவும், உரங்கள் தட்டுப்பாடு இன்றி கிடைத்திடவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். அரசின் திட்டங்கள் காலதாமதமின்றி பொதுமக்களை சென்றடைய வழிவகை செய்ய வேண்டும்'' என்றார்.

இதில், மாவட்ட ஊராட்சி செயலர் மைதிலி, துணை ஆட்சியர் (பயிற்சி) ராஜசேகர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மருத்துவ குணங்கள் கொண்ட வேப்பிலை**




உடலை என்றும் இளமையுடன் இருக்கச் செய்யும் அற்புத சக்தி வேப்பிலையில் உள்ளது. கற்பமூலிகை என்றழைக்கப்படும் வேப்பிலைக்கு நரை, மூப்பு என்ற மூன்றையும் அணுக விடாமல் தடுக்கும் குணம் உண்டு. இந்திய திருநாட்டின் பாரம்பரிய மரங்களில் ஒன்று தான் வேம்பு. இதனை சக்தி என்றே அழைக்கின்றனர். சமய வழிபாட்டில் வேம்பு ஒரு பெண் தெய்வமாகவே போற்றி வணங்கப்படுகிறது. மருத்துவக் குணங்கள் கொண்ட வேம்பின் இலைகள் பற்றி நீண்ட ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. வேப்பிலையை சர்வரோக நிவாரணி என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் பிருந்தே நம் மூதாதையர்கள் வேப்பிலையை உட்கொள்ளும் பொருளாக உபயோகப்படுத்தி வந்துள்ளனர். அப்படி உபயோகிப்பதில் எந்த விதமான பக்க விளைவுகளும் இல்லை என்பதையும் கண்டறிந்துள்ளனர். ஆனால், கருத்தரித்த தாய்மார்களும் கருத்தரிப்புக்காக காத்தி ருப்போரும் இதை உட்கொள்ளக்கூடாது என்றும் கூறியுள்ளனர். 2005ம் ஆண்டு ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிவியல் ஆய்வறிக்கையில் வேப்பிலையின் மருத்துவக்குணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குதல், வீக்க உருக்கி, குடல் புண்ண கற்றி, மலேரியா போக்கி, பூஞ்சை நோய் நீக்கி, பாக்டீரியா அகற்றி, வைரஸ் அகற்றி, ஆண்டி ஆக்சிடென்ட், புற்றுநோய் தடுப்பு, வேப்பிலையில் நார்ச்சத்து, மாவுச்சத்து மற்றும் புரதச்சத்து, 10 விதமான அமினோ அமிலங்கள் உள்ளன. வேப்பிலையை நம்முடைய முன்னோர்கள் பலவிதமான ஆயுர்வேத சித்த மருந்துகளில் உபயோகப்படுத்தியுள்ளனர். வேப்பிலை சாறில் தொழுநோய், வயிற்றுப் புழுக்கள், சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாவதை அறிந்து இந்த நோய்களுக்கு உபயோகப் படுத்தியுள்ளனர். நாள்பட்ட தோல் வியாதிகளை எந்த விதமான பக்க விளைவுகளும் இன்றி குணப்படுத்தக்கூடிய ஒரு அற்புதம் வேப்பிலைக்கு உண்டு. சோரியாசிஸ், சாதாரண சிரங்கு, நமைச்சல், புழுவெட்டுநோய், மருக்கள் முதலியவை வேப்பிலையால் குணமாகக்கூடிய சரும நோய்கள். வேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து முகப்பரு உள்ள இடத்தில் பூசினால் வெகு விரைவில் மறைந்துவிடும்.

**வேப்பிலையை பயன்படுத்தும் முறை :**

புத்தம் புதிதாக பறிக்கப்பட்ட இலைகளை பயன்படுத்த வேண்டும். வேப்பிலையை தண்ணீரில் கொதிக்க வைத்து சுண்டக்காய்ச்சி ,

அதனுடைய அடர்த்தி அதிகமான நிலையில் உபயோகிப்பது. வேப்பிலையை சாறு எடுத்து உபயோகிப்பது.

**வேப்பிலையின் பொதுவான பயன்கள்:**

அப்படியே அரைத்து சரும வியாதிகள் மேல் பூசலாம். சரும வியாதி உள்ளவர்கள் வெந்நீரில் வேப்பிலை போட்டு கொதிக்க வைத்து அந்த நீரில் குளித்து வரலாம். சின்னம்மை, தட்டம்மை போன்ற அம்மை நோய்களுக்கு கிருமி நாசினியாக பயன்படுத்தலாம். வேப்பிலையை பச்சையாக வெறும் வயிற்றில் சாப்பிட சர்க்கரைநோய் உள்ளவர்களுக்கு ரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும். வேப்பிலையை காலையில் டீயுடன் சேர்த்து அருந்தினால் சாதாரண சளி இருமல் குறையும். வேப்பிலையை அரைத்து வீக்கம் உள்ள இடங்கள், மூட்டுகள் , வாத நோய் கண்ட இடங்களில் பூசலாம். முதுகுத் தண்டு வலி, தசைப்பிடிப்பு போன்றவற்றிற்கும் சிறந்த மருந்தாகும்.

**வேப்பிலையின் தொழிற்சாலை உபயோகங்கள்:**

விவசாயத்துறையில் பூச்சிக்கொல்லியாகவும், கிருமி நாசினியாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதிலுள்ள முக்கிய வேதிப்பொருள் தற்போது நாம் உபயோகிக்கும உரங்களில் சேர்க்கப்படுகிறது. அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அழகுக்காக உபயோகப் படுத்தும் கிரீம்கள், லோஷன்கள், சோப்பு மற்றும் கூந்தல் எண்ணெய்களில் வேப்பிலை பயன் படுத்தப்படுகிறது. இந்திய மருத்துவத்தில் வேப்பிலை முக்கிய பொருளாக பயன்படுகிறது.

சூழ்நிலைக்கேற்ப உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய் வராமல் தடுக்கிறது. ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்கும் தன்மை வேப்பிலைச்சாறுக்கு உண்டு. வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை மற்றும் வயிற்றில் சுரக்கும் ஹைட்ரோ குளோரிக் அமிலத்தை மட்டுப் படுத்தும் தன்மை வேப்பிலைக்கு உண்டு. மலேரியக் காய்ச்சலுக்கு குளோரோக்குவின் என்ற மருந்து கொடுக்கப்படும். இந்த மருந்துக்கு

கட்டுப்படாமல் இருக்கும் காய்ச்சலை வேப்பிலை கொடுத்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். காளான் நோய்களான டிரைக்கோபைட்டா மற்றும் பிற காளான் நோய்களையும் வேப்பிலையைக் கொண்டு தீர்க்க முடியும். பாக்டீரியாக்களின் வளர்ச்சியைத் தடுக்கும் பண்பு வேப்பிலைக்கு உண்டு. கிராம்பாசிட்டிவ் மற்றும் நெகட்டிவ் பாக்டீரியாக்களை அழிக்கும் தன்மை வேப்பிலைக்கு உண்டு. வைரஸ் நோய்களை எதிர்க்கும் சக்தி வேப்பிலைக்கு உண்டு. இதனை அம்மை நோய்களுக்கு உபயோகிக்கும் மருந்தாக நம் முன்னோர் காலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது.

**வெண்பன்றி வளர்ப்பில் அதிக லாபம் பெறலாம் வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை**

காரைக்குடி, : வெண் பன்றி வளர்ப்பில் அதிக லாபம் பெறலாம் என குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் விவசாயத்தை மட்டும் நம்பியிருக்காமல் விவசாயம் சார்ந்த தொழில்களை நாட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயம் சார்ந்த தொழில்களில் கால்நடை வளர்ப்பு தொழில் முதன்மையாக உள்ளது. தற்போது உள்ள நிலையில் விவசாயிகள் வெண் பன்றி வளர்த்து அதிக லாபம் பெறலால் என காரைக்குடி அருகே குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இது குறித்து அவர்கள் கூறுகையில்: வெண்பன்றி வளர்ப்பு பிரபலமடைந்துவரும் முக்கிய தொழிலாக உள்ளது. வெண்பன்றியானது 3 பங்கு தீவனத்தை சாப்பிட்டு ஒரு பங்கு இறைச்சியை தரக்கூடியது.

பண்ணையின் கடைசிப் பகுதியில் பன்றிகளுக்கு கொட்டகை அமைக்க வேண்டும். கொட்டகை அமைக்கும் இடம் மேட்டுபாங்காகவும், நீர்தேங்காமலும், காற்றோட்ட வசதி உள்ளதாக இருக்க வேண்டும். தடையற்ற தண்ணீர் அவசியம். குட்டி போடும் பன்றிகள்,

குட்டிப்பன்றிகள், வளரும் பன்றிகள், சினைப்பன்றிகள், கிடாப்பான்றிகள் மற்றும் இறைச்சிப் பன்றிகள் போன்றவற்றிக்கு தனிதனியாக கொட்டகை அமைக்க வேண்டும். வளரும் பன்றிகளுக்கு 8 X 15 சதுர அடியும், பருவடைந்த பன்றிகளுக்கு 20 சதுர அடியும், குட்டி போடும் மற்றும் கிடாப் பன்றிகளுக்கு 65 சதுர அடி இடம் இருக்குமாறு அமைக்க வேண்டும். குட்டிகள் பிறந்தவுடன் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க உடனடியாக சீம்பால் தர வேண்டும். குட்டி பிறந்த நாளிலேயே குட்டிகளின் ஊசி பற்களை வெட்டிவிட வேண்டும். குட்டிகளில் இறப்பை தவிர்க்க 10 நாட்களுக்கு குட்டிகளுக்கான அறையில் 200 வார்ட்ஸ் பல்பு பொருத்தி இளஞ்சூடான வெப்பநிலையை உருவாக்க வேண்டும். ரத்த சோகை நோயை தடுக்க இரும்பு சத்தை ஊசி அல்லது குடிநீரில் மூலம் தரலாம். காய்கறிகழிவுகள், உணவு விடுதிகழிவுகள் ஆகியவற்றை சேகரித்து நன்றாக வேகவைத்து தரலாம். 4 முதல் 8 வாரம் வரை ஒரு நாளைக்கு 0.5 கிலோ வீதம், 9 முதல் 20 வாரம் வரை நாளொன்றுக்கு 1 கிலோ வீதமும், 21 முதல் 28வது வாரம் வரை 1.5 முதல் 2 கிலோ வீதம் தீவனம் அளிக்கலாம். 30 வாரத்திற்கு மேல் ஒரு நாளைக்கு 2.5 முதல் 3 கிலோ வரை தீவனம் தர வேண்டும். காலை, மாலை என இருவேளை குளிப்பாட்ட வேண்டும். பன்றிகாய்ச்சல் மற்றும் கோமாரி நோய்க்கு எதிராக தடுப்பூசி போட வேண்டும். கொட்டகை, தண்ணீர் தொட்டிகளை சுத்தமாக வைக்க வேண்டும். பன்றி குட்டிகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும் என்றனர்.